**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 71/2018**

**Deposition of Witness for Prosecution : P.W.5**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : **கருப்பையா** | Caste | : | |
| Father/Husband Name | : **ராக்கன்** | Calling | : | |
| Village | : | Religion | : | |
| Taluk | : | Age | : | |

**(All Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 28.04.2025**

**முதல் விசாரணை**

நான் உத்தப்பநாயக்கனூரில் குடியிருந்து வருகிறேன். நான் கல்யான மஹாலில் மேனேஜராக இருந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **(அ.சா.ஆ. 4)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **(அ.சா.ஆ. 5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா. 2 அழகுமலை எனது மாமா. அவர் கேட்டுகொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். எதற்காக போட்டேன் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 14.10.2017 ஆம் தேதியில் 12.30 மணியளவில் எதிரிகள் இருவரும் உத்தப்நாயக்கனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் முன்னிலையில் தாமாக முன்வந்து எந்த ஒரு துண்டுதலுமின்றி சாட்சிகள் நான் மற்றும் நாகராஜ் என்பவர் முன்னிலையில் எதிரிகள் இருவரும் கடந்த 11.10.2017 ஆம் தேதியில் உத்தப்பநாயக்கனூர் வில்பாப் பள்ளி அருகே நடந்து சென்றுகொண்டிருந்தபோது அ.சா.1யிடம் ஒரு பவுன் தங்க செயினை பறித்துகொண்டு சென்றதாக ஒப்புதல் வாக்குமூலும் அளித்தார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அடிப்படையில் எதிரிகள் தங்களிடமிருந்து நகைகளையும், TN 58 AP 9612 என்ற இருசக்கர வாகனத்தில் சாட்சிகளாகவும் எங்கள் முன்னிலையில் ஒப்படைத்தார்கள் என்றும், அதை மேற்படி சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் எங்கள் முன் கைப்பற்றினார் என்றும், அதற்கு சாட்சியாக நானும் சாட்சி நாகராஜ் என்பவரும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் சாட்சி கையெழுத்து செய்தோம் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**